**ஜனவரி – 19**

# TNPSC துளிகள்

- 2019 ஆம் ஆண்டு ஜனவரி 20-ம் தேதியன்று நடைபெற இருக்கும் 16-வது டாடா மும்பை மாரத்தான் போட்டிக்கான நிகழ்ச்சித் தூதுவராக ஆறுமுறை உலக பெண்கள் குத்துச் சண்டைப் போட்டியின் சாம்பியனும் ஒலிம்பிக் பதக்கம் வென்றவருமான M.C. மேரி கோம் பெயரிடப்பட்டுள்ளார்.
    - இப்போட்டி புரோகேம் சர்வதேச நிறுவனத்தால் நடத்தப்பட இருக்கின்றது.
- நாட்டின் கிழக்கு முனைப் பகுதி முழுவதுமாக சீனாவின் ராணுவக் கட்டமைப்பு பற்றிய கவலைகள் அதிகரித்த போதிலும், மத்திய அரசு இந்திய திபெத் எல்லைக் காவல்படையின் யுக்தி சார்ந்த கட்டுப்பாட்டு முனையை தற்போது மையம் கொண்டுள்ள சண்டிகரிலிருந்து ஜம்மு காஷ்மீரில் உள்ள லே பகுதிக்கு மாற்றுவதற்கு ஆணையிட்டு இருக்கின்றது.
- குஜராத் மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களுக்குப் பிறகு மூன்றாவது மாநிலமாக உத்தரப் பிரதேசம் வேலை வாய்ப்பிலும் கல்வி நிலையங்களிலும் உயர் சாதியினரில் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கான 10 சதவிகித இட ஒதுக்கீட்டை அங்கீகரித்திருக்கின்றது.
- மத்திய சமூக நீதி மற்றும் அங்கீகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழ் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மேம்பாட்டுத் துறை மும்பையில் உள்ள நேரு மையத்தில் "தீன்தயாள் மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம்" என்ற பெயரில் அமைந்த திட்டத்தின் மீதான இரண்டாவது பிராந்திய மாநாட்டை நடத்தியிருக்கின்றது.
- புதுதில்லியில் பெட்ரோலியம் மற்றும் எரிவாயுத் துறை அமைச்சகத்தின் ஆதரவின் கீழ் ஒரு வருடாந்திர, அதி தீவிரமான, ஒரு மாத கால அளவிலான, மக்களை மையப்படுத்திய மிகப்பெரிய பரப்புரையான சாக்சம் என்பதின் 2019 ஆம் ஆண்டு பதிப்பு (பெட்ரோலியம் பாதுகாப்பு ஆராய்ச்சி மையத்தின்) வெளியிடப்பட்டது.
- 2019-ம் ஆண்டின் AFC (ஆசிய கால்பந்துக் கூட்டமைப்பு – Asian Football Federation) ஆசியக் கோப்பையில் இந்திய அணி வெளியேறியதற்குப் பிறகு இந்திய கால்பந்து அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவியிலிருந்து ஸ்டீபன் கான்ஸ்டான்டைன் விலகியுள்ளார். இந்தியா சார்ஜா மைதானத்தில் பஹ்ரைன் அணிக்கு எதிரான ஆட்டத்தில் தோல்வியைத் தழுவியது.
    - 2005-ம் ஆண்டில் இந்தியாவின் தலைமைப் பயிற்சியாளராக பதவியேற்றார். இது கான்ஸ்டான்டைனின் இரண்டாவது பதவிக் காலமாகும்.
- இந்திய ரிசர்வ் வங்கி சமீபத்தில் அரசிற்குச் சொந்தமான மகாராஷ்டிரா வங்கியின் மீது “உங்கள் வாடிக்கையாளரை அறியவும்” என்ற விதிமுறைகளையும் மோசடியாளர் வகைப்படுத்துதல் விதிமுறைகளையும் சரிவரப் பின்பற்றாத காரணத்திற்காக 1 கோடி ரூபாய் அபராதத் தொகையை விதித்திருக்கின்றது.
- ஜப்பானின் குசிநோராபு தீவில் உள்ள ஒரு எரிமலை வெடித்திருக்கின்றது. இந்த வெடிப்பு ஷின்டாகி மலையின் மீது ஏற்பட்டிருக்கின்றது. 2015-ம் ஆண்டில் ஷிண்டாகிமலை வெடிப்பைக் கண்டிருக்கின்றது.
- தைவானின் அதிபர் சாய் இங்-வென் உள்ளாட்சித் தேர்தல்களில் ஆளும் கட்சியான ஜனநாயக முற்போக்குக் கட்சியின் கடும் தோல்விகளுக்குப் பிறகு நடந்த

அமைச்சரவை மறுசீரமைப்பின் போது சு செங்-சாங் என்பவரைப் பிரதமராக நியமித்திருக்கின்றார்.

# தமிழ்நாடு செய்திகள்

## எம்ஜிஆர் பிறந்த ஆண்டு நினைவு நாணயங்கள்

- 100 ரூபாய் மற்றும் 5 ரூபாய் என்ற பிரிவுகளில் இரண்டு நினைவு நாணயங்கள் மறைந்த தமிழ்நாட்டு முதலமைச்சர் M.G. ராமச்சந்திரனின் 102-வது பிறந்த ஆண்டு விழாவை அனுசரிப்பதற்காக வெளியிடப்பட்டு இருக்கின்றது.
- பிறந்த நாள் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, புகழ்பெற்ற மெரினா கடற்கரையில் உள்ள காமராஜர் சாலையின் குறுக்காக 66 அடி அகலமும், 52 அடி உயரமும் கொண்ட டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு வளைவும் திறந்து வைக்கப்பட்டது.




# தேசியச் செய்திகள்

## பாக்யாங் விமான நிலையத்தில் இந்திய விமானப் படையின் AN32 விமானம் தரையிறக்கம்

- முதன்முறையாக இந்திய விமானப் படையின் அன்டோனோவ் 32 என்ற வகுப்பைச் சேர்ந்த விமானம் (AN-32/ Antonov-32) நாட்டின் உயரமான விமானத் தளங்களில் ஒன்றான சிக்கிமின் பாக்யாங்க் விமானத் தளத்தில் வெற்றிகரமான தரையிறக்கத்தை மேற்கொண்டிருக்கின்றது.
- இந்திய சீன எல்லையிலிருந்து 60 கிலோ மீட்டர் தொலைவில் ஒரு யுக்திசார் மையத்தில் இவ்விமானத் தளம் அமைந்திருப்பதாலும், கடல் மட்டத்தை விட 4500 அடிகள் உயரத்தில் இது அமைந்திருப்பதாலும் இந்த வெற்றிகரமான தரையிறக்கமானது ஒரு மிகப்பெரிய முக்கியத்துவத்தை அடைந்திருக்கின்றது.

- கடந்த வருடம் இந்த விமான நிலையத்தில் இந்திய விமானப் படையின் ட்ரோனியர் வகை விமானம் தரையிறங்கியிருந்தது.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா ஆஸ்திரேலியா சுரங்கப் பாதுகாப்பு ஒப்பந்தம்

- மத்திய அமைச்சரவை இரு நாடுகளிலும் சுரங்கப் பாதுகாப்பை மேம்படுத்திட ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாகாணத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு தனது ஒப்புதலை அளித்திருக்கின்றது.
- இந்த ஒப்பந்தம் ஒரு ஒத்துழைப்பை பின்வருபவர்களிடையே ஏற்படுத்தும். அவர்களாவன:
    - சுரங்கம் தோண்டுவதற்கு அனுமதி அளிப்பதற்கும் சட்டப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் பொறுப்பான இந்திய அரசுத் துறையான சுரங்கப் பாதுகாப்பின் இயக்குநர் ஜெனரல்
    - சுரங்கங்களின் நிலையை மேம்படுத்திடவும், பணியாளர்களுக்குப் பாதுகாப்புப் பயிற்சியினை ஏற்படுத்திடவும் பணியாற்றிடும் ஆஸ்திரேலிய ஆராய்ச்சிக் குழுமமான சுரங்கத்தில் பாதுகாப்பு, சோதனை மற்றும் ஆராய்ச்சி மையம்.
- இந்த இரண்டு குழுக்களும் பாதுகாப்பு மேலாண்மை முறையை ஏற்படுத்தவும், சிறந்த பாதுகாப்பு முறைகளில் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்திடவும், கருத்தரங்குகள், மாநாடுகள் உட்பட கணிசமான சந்திப்புகளை நடத்திடவும் இணைந்து பணியாற்றும்.

# பொருளாதாரச் செய்திகள்

## சுட்டுரையில் "உங்கள் பட்ஜெட்டை அறியவும்" தொடர் - மத்திய நிதியமைச்சகம்

- மத்திய நிதியமைச்சகம், ஆண்டு நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும் முறை பற்றி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த சுட்டுரையில் "உங்கள் பட்ஜெட்டை அறியவும்" என்ற தொடரை ஆரம்பித்திருக்கின்றது.
- இந்த தொடர் பட்ஜெட்டில் உபயோகப்படுத்தப்படும் பல்வேறு வார்த்தைகளின் விளக்கங்களைக் கொண்டிருக்கும்.
- இந்த தொடர் "மத்திய ஆண்டு நிதிநிலை அறிக்கை மற்றும் கணக்கின் மீதான வாக்கு" என்ற இரு வார்த்தைகளை விளக்குவதிலிருந்துத் தொடங்குகின்றது.
- 2019-20 ஆம் ஆண்டிற்கான இடைக்கால பட்ஜெட்டை மத்திய அரசு 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 01-ம் தேதி வெளியிட இருக்கின்றது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## ஸ்பேஸ் எக்ஸின் தொடர்பு வசதி செயற்கைக் கோள்கள்

- ஸ்பேஸ் எக்ஸ் ஏவு வாகனம் இரிடியம் தொடர்பு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட இரண்டு வருடகால திட்டத்தை நிறைவு செய்யும் வகையில் புவியின் தாழ்வட்ட சுற்றுப்பாதையில் 10 செயற்கைக் கோள்களைச் செலுத்தியிருக்கின்றது.
- இது அதன் அசல் அமைப்பைப் புதிய தலைமுறையிலான கைபேசி தொடர்பு தொழில்நுட்பத்தோடும் உலகளாவிய விமான கண்காணிப்பு வசதியோடும் உள்ள தொழில் நுட்பங்களைக் கொண்டு மாற்றம் செய்யும்.
- முன்பு பெருங்கடலில் கண்காணிப்புத் தரையிறக்க வசதியுடன் கூடிய ஆளில்லா விமானங்களுடன் உபயோகிக்கப்பட்ட முதல் நிலை இதன் மூலம் மீண்டும் மீட்டெடுக்கப்பட்டது. அதே சமயம் மேல்நிலை அதே சுற்றுப் பாதையில் தொடர்கின்றது.
- இரிடியம் நெக்ஸ்ட் திட்டத்தின் 8-வது மற்றும் இறுதிப் புறப்பாடு மெக்லீன் வெர்ஜினியா நிறுவனத்திற்காக சுற்று வட்டப்பாதையில் வெளியிடுவதற்கான 75 புதிய செயற்கைக் கோள்களை உருவாக்கியிருக்கின்றது.
- அதில் 66 செயல்பாட்டிலிருக்கும். மேலும் 9 செயல்பாட்டில் (சுற்றுப்பாதையில்) உள்ளவற்றின் உதிரி பாகங்களுக்காக இருக்கும். ஆறு இதர செயற்கைக் கோள்கள் உதிரிபாகங்களாக தரையில் மீதமிருக்கும்.

# மாநிலச் செய்திகள்

## கேரள உயர்நீதிமன்றம் காரத் ரசாக் என்ற சட்டமன்ற உறுப்பினரை தகுதி நீக்கம் செய்தது

- கேரளாவின் உயர்நீதிமன்றம் கொடுவாலி சட்டமன்ற தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சுயேச்சை சட்டமன்ற உறப்பினரான காரத் ரசாக்கை தகுதி நீக்கம் செய்திருக்கின்றது.
- இவர் 2016 ஆம் ஆண்டின் சட்டமன்றத் தேர்தல்களின் போது எதிரணி வேட்பாளருக்கு எதிராக இவர் மேற்கொண்ட அவதூறுப் பிரச்சாரத்திற்காக தகுதி நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்.
- இந்தத் தகுதி நீக்கமானது 1951 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் விதிமுறைகளின்படி மேற்கொள்ளப்பட்டதாகும்.

# விளையாட்டுச் செய்திகள்

## லாரஸ் உலகின் மீண்டு வந்தவருக்கான ஆண்டு விருது

- அரியானாவைச் சேர்ந்த இந்தியப் பெண் மல்யுத்த வீரரான வினீஷ் போகத் பெருமைமிகு லாரஸ் உலகின் மீண்டு வந்தவருக்கான இந்த ஆண்டு விருதுக்கு நியமிக்கப்பட்ட முதல் இந்திய தடகள வீரராக உருவெடுத்திருக்கின்றார்.

- இவர் காயத்தின் காரணமாக ஏற்பட்ட நீண்ட இடைவெளியால் ஏற்பட்ட போராட்டத்திற்குப் பிறகு மீண்டு வந்து தனது திறமையினால் கோல்ட் கோஸ்ட் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியிலும், ஜகார்த்தா ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும் தங்கப் பதக்கம் வென்றமைக்காக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.
- இவரைத் தவிர அமெரிக்க சுற்றுப் பயண சாம்பியன்ஷிப் வெற்றியாளர் டைகர் வூட்ஸ், கனடாவின் பனிச்சறுக்கு விளையாட்டு வீரரான மார்க் மெக்மோரிஸ், அமெரிக்க ஊசியிலைக் காடுகளின் பனிச்சறுக்கு விளையாட்டு வீரரான லின்ட்சே வோன், ஜப்பானிய பனிச்சறுக்கு வீரரான யுசுரு மன்யு மற்றும் டச்சு நாட்டின் பனிச்சறுக்கு வீரரான பிபியன் மென்டெல் ஸ்பீ ஆகியோரும் இதே விருதுக்காக நியமனம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

# இதரச் செய்திகள்

## உலக ஆரஞ்சுத் திருவிழா

- 2019 ஆம் ஆண்டு ஜனவரி 18-ம் தேதி ஆரஞ்சுகளுக்கான நகரமான நாக்பூரில் முதல்முறையாக இரண்டாவது உலக ஆரஞ்சுத் திருவிழா ஆரம்பித்தது.
- இத்திருவிழா ஆரஞ்சுப் பழங்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில் அதன் அழகிய தோற்றத்தை அடையாளப்படுத்தி மதிப்பு உயர்த்தவும் திட்டமிடும்.
- இத்திருவிழா UPL என்ற நிறுவனத்தால் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மேலும் இது மகாராஷ்டிரா சுற்றுலாத் துறையால் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

- - - - - - - - - - - - - - -